# 2.3 ஆச்சரியமானக் கிருபை

**வேத வசனம்:** கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. எபேசியர் 2:8

**அறிக்கை:** தேவனுடைய கிருபையால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்பு எனக்கு உண்டு

**சத்தியம்:** நாம் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தாலே மீட்கப்பட்டுள்ளோம். இது நம்முடைய கிரியைகளால் அல்ல. தேவனுடைய அளவற்ற கிருபையினால் மட்டுமே. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது தேவனுடைய ஈவு.

## ஆர்வமூட்டும் வினாக்கள்

(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- *தேவன் ஏன் நம்மேல் கிருபை கூர்ந்தார்?*
- *2 தீமோ 2:1ல் கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பெலப்படு என்று கூறியிருப்பதன் அர்த்தம் என்ன?*
- *தேவனுடைய கிருபையை தொடர்ச்சியாக அனுபவிப்பதற்கான வழிகள் என்ன?*

## பாடக்குறிப்புகள்

- **ஆச்சரியமானக் கிருபை** - *ரோமர் 8:32*
- **கிருபையின் வல்லமை** - *1 கொரி 15:9,10*
- **கிருபையின் உண்மை** - *2 யோவான் 3*
- **விசுவாசத்தினால் கிருபையைப் பெறுதல்.** *எபே 2:7-9, எபி 11:6*
- **கிருபையைப் பெறுவதன் விளைவு** - *2 கொரி 12:1,10*

## வேதப்பகுதி

*அப். 22:3-15*

**ஆச்சரியமானச் சுதந்திரம்:** இயேசு கிறிஸ்துவின் மூலமாய் மன்னிப்பையும் இரட்சிப்பையும் இலவசமாகப் பெறுவது ஆச்சரியமானது. இவைகளை நாம் சுயமாக சம்பாதிக்க முடியாது. இந்த வெகுமதியை விருப்பமுள்ள யாவரும் பெற்றுக்கொள்ளலாம். இதன் பின்னர் நாம் உலகத்தைச் சாராமல் அதைக் காட்டிலும் வல்லமையுடைய தேவனையே சார்ந்து கொள்ளுவோம். அப்போஸ்தலனாகிய பவுல் தேவனுடைய கிருபையைத் தொடர்ச்சியாகச் சார்ந்து கொண்டார். ஆகையால் தேவனுக்குக் கீழ்ப்படியவும் அநேகருக்கு சுவிசேஷத்தை அறிவிக்கவும், அவர்களை தேவனிடம் வழிநடத்தவும் அவரால் முடிந்தது. தேவனுடைய கிருபையை நாமும் அனுபவிக்கலாம்.

## செயல்

**இரட்சிப்பை கிருபையின் மூலமே சொந்தமாக்க முடியும். அதனைக் கிருபையின் மூலம் இலவசமாய் பெற்றுக்கொண்ட நாம், நாம் நேசிக்கிற ஒருவருடன் நன்றியோடு இதனைப் பகிர்ந்துகொள்ளப் பழகுவோம்.**

**சிந்திக்க:**

*நாம் எவ்வாறு தேவனுடைய கிருபையை இன்றைய நாட்களில் விளக்க முடியும்?*

______________________________

______________________________

**ஜெபம்:**

*உன் வாழ்வில் கிடைத்த கிருபைக்காக இயேசுவுக்கு நன்றி சொல்லும் ஜெபத்தை இங்கு எழுது.*

______________________________

______________________________